எஸ்.டி.சி.எண்.**446/2021,** ம.சா.**1,** ராமசாமி, த.பெ. வீரப்பன், தேதி **02.12.2025**
( எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் ).

(எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 311ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி திரும்ப அழைக்கப்பட்டுள்ளார்)

<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

நான் ஆசிரியர் பணியாற்றி வருகிறேன். நான் மாதம் ரூபாய் 80,000/- ஊதியம் பெற்று வருகிறேன். நான் வருமான வரி செலுத்தி வருகிறேன். எனக்கு வீடு , தோட்டம், சொந்தமாக உள்ளது. வருமான வரி கட்டியதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியும் என்றால், சரிதான். என் மனைவியும் ஆசிரியராக பணியாற்றி வருகிறார். அவரும் வருமான வரி செலுத்தி வருகிறார். ஆசிரியர் தொழிலில் வருமானத்தை தவிர எனக்கு வேறு எந்த வருமானமும் இல்லை என்று சொன்னால், சரிதான். நான் இடம் வாங்கி வீடு கட்டியது 2005 ஆம் ஆண்டு ஆகும். இந்த வீடு வாங்கியது வரவு செலவு விவரம் எனது மனைவி பெயரில் உள்ளதற்கான ஆவணத்தினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். வீடு கட்டியதற்கான செலவு விவரம் குறித்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால், முடியாது.

2. சேமிப்பு பணம் வைத்திருந்ததற்கான வருமான வரி செலுத்தியுள்ளேனா என்றால், செலுத்தியுள்ளேன். அந்த வருமான வரி கணக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால், முடியும். என்னுடைய சம்பளத்தில் இருந்து சேமித்த பணம் என்று வழக்கில் குறிப்பிட்டுள்ள சேமிப்பு பணத்தை சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சேமிப்பு பணம் என்று சொல்வது தவறு என்றும், நான் எதிரிக்கு கொடுக்கவில்லை கடன் எதுவும் கொடுக்கவில்லை என்று சொன்னால், தவறு சரியல்ல.

3. பணம் கொடுத்தாக கூறப்படும் தேதி 17.02.2019 பின்பு அந்த தேதியிலிருந்து 17.03.2021 வரை எதிரியை சந்தித்து பணத்தை திருப்பி கேட்டேனா என்றால், கேட்டேன். பணத்தை திருப்பி கேட்டதற்கான எழுத்து பூர்வமான ஆவணம் என்னிடம் உள்ளதா என்றால், இல்லை. நான் என்னிடம் பெற்றதாக கூறப்படும் கடனை 17.02.2019 ஆம் தேதியிலிருந்து 17.03.2021 தேதி வரை இடைப்பட்ட காலத்தில் வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு தொகை கேட்டு அனுப்பினேனா என்றால், இல்லை. 17.02.2019 ஆம் தேதியிலிருந்து 17.03.2021 தேதி வரை இடைப்பட்ட காலத்தில் காவல் நிலையத்தில் புகார் ஏதேனும் கொடுத்தேனா என்றால், இல்லை. இந்த தொகை திரும்ப செலுத்துவது

சம்பந்தமாக எனது கிராமத்தில் பஞ்சாயத்து நடைபெற்றதா என்றால், இல்லை. வழக்கு காசோலையில் உள்ள கையெழுத்துக்கும், தொகை பூர்த்தி செய்த எழுத்துக்கும் மை வேறுபாடு உள்ளது என்று எனது குறுக்கு விசாரணையில் சொல்லவில்லை என்றால், சரிதான். இந்த காசோலையில் உள்ள கையெழுத்து எதிரியின் கையெழுத்து அல்ல என்றும், நான் பூர்த்தி செய்த கையெழுத்து என்று சொன்னால், தவறு சரியல்ல. வழக்கு காசோலை திருப்பபட்டதற்கான காரணம் வங்கி கணக்கில் உள்ள கையெழுத்துடன் காசோலையில் உள்ள கையெழுத்துடன் பொருந்தவில்லை என்று கட்சி செய்துள்ளேன் என்றால், சரிதான்.

4. எதிரி கையெழுத்து செய்திருந்திருந்தால் அது வங்கியில் உள்ள கையெழுத்துடன் பொருந்தி இருக்கும், நான் காசோலையில் கையெழுத்து செய்ததால் பொருந்தவில்லை என்று சொன்னால் , சரியல்ல. கையெழுத்து பொருந்தவில்லை என்ற காரணத்தால் மாற்றுமுறை ஆவணச் சட்டத்தின் கீழ் வழக்கு தொடரபட முடியாது என்று சொன்னால், சரியல்ல. எனக்கு எதிரியை ஆசிரியர் என்ற முறையில் தெரியும். எதிரியை அவர் பணி ஓய்வு பெற்ற பின்பு எங்கு உள்ளார் என்றும், அவர் வீட்டிற்கும் சென்றுள்ளேனா என்றால், சென்றுள்ளேன்.

5. எதிரியுடன் எனக்கு நெருக்கமான பழக்கம் என்றால் இல்லை. அவர் ஆசிரியர் என்ற முறையில் நண்பர். அவர் ஓய்வு பெற்ற ஆசிரியர் அவர் என்னிடம் கடன் வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. ஆனால் அவர் பணியில் இருக்கும்போதுதான் என்னிடம் கடன் பெற்றார். எதிரி பணியில் இருக்கும்போது தேவையான ஊதியம் பெற்று வந்தார் என்றும், என்னிடம் கடன் வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால், சரியல்ல. இந்த காசோலை எதிரி எனக்கு தரவில்லை என்றும், எதிரியால் காசோலை பூர்த்தி செய்யப்படவில்லை என்றும், எதிரியிடம் இருந்து தொகையை அபலாபமாக அடைந்துவிட வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. மாற்றுமுறை ஆவணச் சட்டத்தின்படி இந்த வழக்கு சமூக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படகூடிய வழக்கு அல்ல என்று சொன்னால், சரியல்ல. எதிரி எனக்கு எந்த கடன் தொகையும் தரவேண்டியது என்று சொன்னால் சரியல்ல, கடன் தொகையை திருப்பி தரவேண்டும்.

மறு விசாரணை இல்லை.